**13.11.2024**

**O.S.No.156/2016 மற்றும் 48/2012**

**பி.வா.சா.1 : ஆரோக்கியம்**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) வழக்கு தாக்கல் செய்துள்ள சரண்யா எனது உடன் பிறந்த சகோதரர் அழகுவேலின் மகள். என்னுடன் பிறந்தவர்கள் 4 பேர். பழனியம்மாளும், சிவகாமியும் சகோதரிகள். எனது அப்பா அம்மாவிற்கு நாங்கள் 4 பேர் தான் வாரிசுகள். சரண்யா தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை வழக்கில் கண்டுள்ள பெரும்பான்மை சொத்து என் அப்பா முத்துசாமிக்கும் அலமேலுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

2) அழகுவேல் இறந்துவிட்டார். அவருடைய வாரிசு தான் சரண்யாவும், 2ம் பிரதிவாதி-மாதேஸ்வரியும். நான் கூலி வேலை, விவசாயம் செய்து வருகிறேன். அழகுவேல் இறந்த பின்னிட்டு நான் தான் என் குடும்பத்தில் ஒரே ஆண் வாரிசு என்றால் ஆமாம். நான் தான் குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தேன் என்றால் சரிதான். அழகுவேலின் மனைவி மாதேஸ்வரி இந்த சொத்தில் ஒரு பகுதியில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறார் என்றால் சரிதான்.

3) சாட்சி பின்னிட்டு அந்த மளிகை கடை தான் நடத்தி வந்ததாகவும், 2012 ல் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் வெளியூர் சென்று இருந்த சமயம் பூட்டை உடைத்து மாதேஸ்வரி உள்ளே புகுந்து கொண்டதாக சொல்கிறார். இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். நான் மளிகை கடை நடத்தியதற்கு

ரசீது, தொழில் வரி, முதலிய ரசீதுகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த மளிகை கடையின் வீட்டு வரி ரசீது, மற்றும் மின்சார ரசீது ஆகியவை என் பெயரில் தான் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன்.

4) என் பெற்றோர் இறந்ததற்கு வாரிசு சான்று தாக்கல் செய்துள்ளேன். முத்துசாமியின் வாரிசு சான்றை நான் தான் வாங்கினேன். அலமேலுவுக்கு நான் மட்டுமே வாரிசு என்று வாரிசு சான்று வாங்கி கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் நான் வாங்கி கொடுத்த வாரிசு சான்று இது தான் என்றால் சரிதான். அந்த ஆவணம் நகலாக இருப்பதால் குறியீடு செய்யப்படவில்லை.

5) முத்துசாமிக்கு நானும், அலமேலும் தான் வாரிசு என்று வாரிசு சான்று வாங்கியுள்ளேன். என் தாயாரும் உடன் இருந்தார். என் அப்பா அம்மாவுக்கு 4 வாரிசுகள் இருக்கும் போது, முத்துசாமிக்கு நானும், அலமேலும் தான் வாரிசு என்று வாரிசு சான்றும், அலமேலுக்கு நான் மட்டுமே வாரிசு என்றும் உண்மை சங்கதிகளை மறைத்து வாதிக்கு சேரவேண்டிய சொத்து உரிமையை மறுப்பதற்காக ஏமாற்றி வாரிசு சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. 1987 லேயே குடும்பத்தில் வாய்மொழியாக பாக பிரிவினை ஏற்பட்டு உரிய பாகத்தை வாங்கி கொண்டு அவர்கள் சென்று விட்டதால் அவர்களை வாரிசாக இதில் சேர்க்கப்படவில்லை.

6) 1987 லேயே குடும்பத்தில் வாய்மொழியாக பாக பிரிவினை ஏற்பட்டு உரிய பாகத்தை வாங்கி கொண்டு அவர்கள் சென்று விட்டதாக சொல்வதற்கு ஆவணம்

ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. உயில் சாசனம் உள்ளது. இந்த உயில் சாசனத்தில் இருக்கும் முத்துசாமியின் கையெழுத்தும், என் அம்மாவின் கைரேகையும் அவர்களுடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இந்த உயில் சாசனம் எங்கு எழுதப்பட்டது என்றால் சேலம் வழக்கறிஞர் குப்புராஜ் முன்னிலையில் எழுதப்பட்டது.

7) மேற்படி உயில் சாசனத்தில் 5 தாள்களில் உள்ள ரேகை ஒன்று கூட பரிசோதனை செய்து தெரிந்து கொள்ளும் அளவில் யாருடைய ரேகை என்று தெரியாத அளவில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து, என் அப்பாவின் கையெழுத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்கள் குடும்ப சொத்தை 14.07.1986 ல் என் அப்பா, என் தம்பி அழகுவேல், நானும் சேர்ந்து செங்கோடகவுண்டருக்கு விற்றுவிட்ட சொத்தின் ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் இல்லை. அப்படி ஒரு சொத்தே எங்கள் குடும்பத்தில் இல்லை.

8) பட்டுதுறையில் முத்துசாமி, அழகுவேல், ஆரோக்கியம் என்ற பெயரில் ஒரே குடும்பத்தை சார்ந்த நபர்கள் எங்கள் குடும்பத்தை தவிர வேறு நபர்கள் உள்ளனரா என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அப்படி ஒரு நபர்கள் யாரும் இல்லை. என்னிடம் காட்டப்படம் ஆவணத்தில் கண்டுள்ள நபர்கள் எங்கள் குடும்பத்தை தான் குறிப்பிடுகிறது என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஆவணத்தில் உள்ள முத்துசாமியின் கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து தான் என்றும் வழக்கிற்காக அதை

ஒப்புக்கொண்டால் உயில் ஆவணத்தில் உள்ள கையெழுத்திற்கும் இதற்கும் முற்றிலும் வேறுபாடு உள்ளதால் அந்த ஆவணத்தை நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா, முத்துசாமி மூப்பனார் என்று கையெழுத்து போடமாட்டார்.

9) பி.வா.சா.ஆ.1 ல் உயில் ஆவணத்தில் என் அப்பாவின் பெயர் முத்துசாமி மூப்பனார் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டுத்துறை கிராமத்தில் இருந்து தலைவாசல் சார் பதிவாளர் அலுவலகம் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. அங்கு சுமார் 10 க்கு மேற்பட்ட ஆவண எழுத்தர்கள் உள்ளனர். இந்த உயில் ஆவணத்தை தலைவாசல் சார் பதிவாளர் அலுவலத்தை சார்ந்த ஆவண எழுத்தர்கள் யாரும் எழுதவில்லை. ஆத்தூரை சார்ந்த பெருமாள் என்பவர் தான் எழுதினார். ஆத்தூர்க்கும் பட்டுத்துறைக்கும் இடையே சுமார் 10 மைல் தூரம் இருக்கும்.

10) உயில் எழுதியதாக சொல்லப்படும் சமயத்தில் ஆத்தூரில் சுமார் 10 க்கும் மேற்பட்ட நோட்டரி வழக்கறிஞர்கள் இருந்தார்கள் என்றால் இருப்பார்கள் எனக்கு தெரியாது. எங்கள் ஊரில் இருந்து சேலத்திற்கு சுமார் 90 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். இந்த உயில் எந்த ஒரு முத்திரை தாளிலும் வாங்கி எழுதப்படவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

11) பிரதிவாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் வாங்கி கொண்டேன். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை. அது சம்பந்தமாக பொதுவர்களிடம் பேசி கால அவகாசம் கேட்டு இருந்தேன். அதனால் பதில் அறிவிப்பு

அனுப்பவில்லை. நோட்டீசை வாபஸ் பெற்றுக்கொள்வதாக சொன்னார்கள். அவ்வாறு பொதுவர்களை வைத்து பைசல் பேசியது சம்பந்தமாக யார் யாரிடம் யார் முன்னிலையில் பைசல் பேசப்பட்டது போன்ற விவரங்களை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின் இந்த உயில் சாசனத்தை தயார் செய்ய பழைய தேதியில் முத்திரை தாள் கிடைக்காது என்பதால் நான் பச்சை பேப்பரில் உயில் ஆவணத்தை மோசடியாக தயார் செய்தள்ளேன் என்றால் சரியல்ல.

12) உயிலில் சொல்லியுள்ளபடி என் அப்பா, அழகுவேல், சகோதரிகள் பணம் வாங்கி கொண்டதாக சொல்லியுள்ளதற்கும் எந்த தேதியில் பணம் கொடுத்ததாக சொல்வதற்கும் எழுத்து மூலமான ரசீது உள்ளதா என்றால் இல்லை. ஊரில் பொதுவர்களை வைத்து பைசல் பேசப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையிலும், நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கிலும் அவ்வாறு பொதுவர்களை வைத்து பைசல் பேசியது சம்பந்தமாக யார் யாரிடம், யார் முன்னிலையில் பைசல் பேசப்பட்டது போன்ற விவரங்களை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

13) உயிலில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நான் சொல்லியுள்ள பதிலுரைக்கு ஏற்றாற் போல தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உயிலில் கண்டுள்ள துரைசாமி என்ற சாட்சி நத்தகரையை சார்ந்தவர். அது பட்டுதுறையில் இருந்து 5

கி.மீ. தூரத்தில் உள்ளது. மற்றொரு சாட்சி ஆறுமுகம் அவர் உள்ளூர்காரர். அவர் உயிருடன் உள்ளார். அவர் எனது ஒன்றுவிட்ட பங்காளி.

14) மேற்படி சாட்சிகள் இருவரும் 1994 ல் சேலத்தில் வைத்து குப்புராஜ் வழக்கறிஞர் முன்னிலையில் கையெழுத்து போட்டார்கள். மேற்படி உயில் சாசனம் சேலத்தில் குப்புராஜ் வழக்கறிஞர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொய் என்றும் எனக்கு வேண்டப்பட்ட விசயம் தெரிந்து நபரை வைத்து மேற்படி உயில் சாசனம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த உயில் சாசனம் உண்மையான உயில் சாசனம் அல்ல என்றும் நடைமுறைக்கே வரவில்லை என்றும் சொன்னாலும் சரியல்ல.

15) பட்டுதுறை கிராமத்தில் கிராம நத்தத்தில் என் அப்பாவிற்கு வீடு உள்ளது. அந்த வீடு ஆரம்பத்தில் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. மேற்படி உயில் சாசனத்தில் எனது சகோதரி, சகோதரர் குடும்பத்திற்கு எவ்வித பாகமும் ஒதுக்கப்படவில்லை என்ற நிலையில் மேற்படி நபர்கள் தொகை வாங்கிகொண்டதாக சொல்லப்படும் நிலையில் அவர்களை இந்த உயில் சாசனத்தில் சாட்சியாகவோ கையெழுத்து செய்யவோ பதிவு செய்ய கொடுக்கவோ நான் கோரவில்லை.

16) பட்டுத்துறை கிராமத்தில் அருகில் உள்ள தலைவாசல் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி உயில் சாசனத்தை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. என் பெற்றோர் விருப்பப்படி விட்டுவிட்டேன். உயில் எழுதும் போது நான் உடன் சென்றேன். வாரிசு சான்றிதழில் எவ்வாறு எனது சகோதரர், சகோதரிகளை

வாரிசாக காண்பிக்காமல் சான்று பெற்றேனோ அதே போல் என் பெற்றோர்கள் இறந்த பின்னிட்டு இந்த வழக்கிற்காக மேற்படி உயில் சாசனத்தை மேற்படி நபர்களுக்கு எவ்வித சொத்தும் இல்லை என்று சொல்லி உயிலை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் பணம் பெற்றுக்கொண்டார்கள். உயிலில் உள்ள கையெழுத்துக்கள் முற்றிலும் மாறுபட்டுள்ளதால் வா.சா.ஆ.23 யை சொத்து ஆவணத்தை நான் முற்றிலும் மறுதளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17) மேற்படி அழகுவேலின் வாரிசுகள் என்ற முறையில் தாவா சொத்தில் கடை நடத்தி வருகிறார் என்று சொன்னால் ஆக்கிரமிப்பு செய்து இருந்து வருகிறார்கள். 1998 என் பெயரில் வாங்கிய சொத்து (பி.வா.சா.ஆ-2) நான் மேற்படி குடும்பத்தின் மூத்த உறுப்பினர் என்ற அடிப்படையில் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய சுய சம்பாத்தியம். அதற்குண்டாக கிரைய தொகைக்கு மேற்படி சரண்யாவும், அவருடைய தாயாரும் பாதி தொகையை என்னிடம் கொடுத்து அதன் அடிப்படையில் என் பெயரில் கிரையம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அது என்னுடைய சுய சம்பாத்தியத்தை வைத்து வாங்கியது.

18) அவ்வாறு சுய சம்பாத்தியத்தில் வாங்கப்பட்டது என்று காட்டுவதற்காக சொத்தை குத்தகைக்குவிட்டதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளது வழக்கிற்காக என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றால்

சரிதான். வெளியூர் நபர்களுக்கு நான் பதிவு செய்து தர முடியாது. மேற்படி ஆவணங்கள் எனக்கு வேண்டப்பட்ட நபர்களின் பெயரில் மோசடியாக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Subordinate Judge, Attur.**